- இந்திய நாளிதழ்களில் முதல் இடம் வகிக்கும் நாளிதழ் - தினத்தந்தி -

தினத் தந்தி
DAILY THANTHI

திருச்சி (11-12-2006) திங்கட்கிழமை | மலர் 65 இதழ் 41 | வெல்க தமிழ் | விய ஸ்ரீ கார்த்திகை மீ 25 ஹிஜ்ரி 1427 துல்கஅதா 19



திருச்சியில் நடந்த விழாவில் 'ஞாலம் போற்றும் பாலம் ஐயா' என்ற நூலை டாக்டர் வி.ஜெயபால் வெளியிட அதனை ஓய்வுபெற்ற விமான படை வீரர் இளங்கோ பெற்றுக்கொண்டபோது எடுத்தபடம். அருகில் பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் தங்கமுத்து, பாலம் தொண்டு நிறுவன தலைவர் கலியாண சுந்தரம், மேயர் சாருபாலா தொண்டைமான், சிலம்பொலி செல்லப்பன் உள்ளனர்.

### 'பாலம்' தொண்டு நிறுவன தலைவர் பற்றிய நூல்

# பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் சேர்க்க சிபாரிசு

## துணைவேந்தர் தங்கமுத்து பேச்சு

திருச்சி,டிச.11-

பாலம் தொண்டு நிறுவன தலைவரின் வாழ்க்கை வரலாறு நூல் பல்கலைக்கழக பாட திட்டத்தில் சேர்க்க சிபாரிசு செய்யப்படும் என்று துணைவேந்தர் தங்கமுத்து கூறினார்.

### பாலம் ஐயா நூல்

'பாலம்' என்ற தொண்டு நிறுவனத்தின் தலைவராகவும், சர்வதேச அகதிகள் நிறுவனத்தின் இந்திய பிரிவு தலைவராகவும் இருப்பவர் பாலம் கலியாண சுந்தரம். இவரைபற்றி வழக்கறிஞர் சீ. ஜெயராமன் எழுதிய 'ஞாலம் போற்றும் பாலம் ஐயா' என்ற நூல் அறிமுகவிழா நேற்று திருச்சி தமிழ்ச்சங்கத்தில் நடந்தது. இந்த விழாவிற்கு டாக்டர் வி.ஜெயபால் தலைமை தாங்கினார். நூல் பிரதியை டாக்டர் ஜெயபால் வெளியிட அதனை ஓய்வு பெற்ற விமான படை வீரர் இளங்கோ பெற்றுக்கொண்டார். இந்த விழாவில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் சி.தங்கமுத்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

### சொந்த செலவில்...

வழக்கமான சமூக போக்கில் இருந்து மாறுபட்டு வித்தியாசமான வாழ்க்கை வாழ்பவர்களை தான் சமூகம் திரும்பி பார்க்கிறது. அப்படி ஒரு வாழ்க்கையை வாழ்வதன் மூலம் சமூகத்தின் பார்வையை தன் பக்கம் திருப்பிஇருப்பவர் பாலம் கலியாண சுந்தரம் அவர்கள். சம்பாதிக்கும் பணத்தில் 10-ல் ஒருபகுதியை தானமாக வழங்கவேண்டும் என்பது பாலம் தொண்டு நிறுவனத்தின் கொள்கை. ஆனால் கலியாண சுந்தரம் ஒரு பங்கை தன்னிடம் வைத்துக்கொண்டு 9 பங்கை தானமாக வழங்கி வருகிறார். அவர் மற்றவர்களிடம் நன்கொடை வாங்கி இந்த நிறுவனத்தை நடத்தவில்லை. தனது சொந்த வருவாயில் செலவு செய்து நடத்தி வருகிறார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு கல்லூரியின் நூலகராக தனது வாழ்க்கையை தொடங்கிய அவர் ஒரு லட்சத்து 11 ஆயிரம் ரூபாய் ஊதிய உயர்வு நிலுவை தொகை கிடைத்தபோது அந்ததொகையை அப்படியே மாவட்ட கலெக்டரிடம் கொடுத்து அனாதை சிறுவர்களின் பராமரிப்பிற்காக வழங்கிவிட்டார். அவர் தொடங்கிய ஒரு ரூபாய் திட்டம் தான் நமக்கு நாமே, சுய உதவி திட்டங்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது. பிளாட் பாரத்து மக்களின் வாழ்க்கை நிலையை அறிவதற்காக அவர் நெல்லை ஜங்ஷன் பிளாட் பாரத்திலும் வசித்து இருக்கிறார்.

### பாடதிட்டத்தில் சேர்க்க சிபாரிசு

அவரது வாழ்க்கை வரலாறு இந்த நூலில் அழகாக விவரிக்கப்பட்டு உள்ளது. இந்த நூல் கல்லூரி மாணவர்கள் அவசியம் படிக்கவேண்டிய நூல். எனவே இந்த நூலை பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பாட திட்டத்தில் சேர்க்க நான் சிபாரிசு செய்கிறேன். இதற்கு ஒப்புதல் அளிப்பது பற்றி பாட திட்ட குழு பரிசீலிக்கும். பள்ளிக்கல்வி துறையும் இதனை பாடமாக ஏற்றுக்கொண்டால் இளம் மாணவர்களின் மனதில் பசுமரத்தாணி போல் பதியும்.

இவ்வாறு துணைவேந்தர் தங்கமுத்து பேசினார்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து கலியாணசுந்தரம் பேசியபோது கூறியதாவது:-

நான் உடல் நலமின்றி திருச்சி விசுவநாதம் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றபோது டாக்டர் ஜெய்பால் என்னை அன்பினால் குணமாக்கினார். அப்போது உலகம் முழுவதும் இருந்து எனக்கு தமிழர்கள் மருத்துவ செலவிற்காக பணம் அனுப்பினார்கள். ஜனாதிபதி அப்துல் கலாம் கூட ஒரு ரூபாய் அனுப்பி இருந்தார். இந்த நேரத்தில் தான் வக்கீல் ஜெயராமனுடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. தினமும் அவர் என்னை சந்தித்து பேசி இந்த நூலை எழுதி உள்ளார். நான் 14 வயதில் சுயநலத்திற்காக தொண்டு செய்ய ஆரம்பித்தேன். அந்த தொண்டு பல குழந்தைகள் கல்வி அறிவு பெற உதவியது. இப்படித்தான் எனது தொண்டு பரவியது.

### சந்தோஷம் எங்கே?

நான் எனது குரல் சரி இல்லை என்பதற்காக தற்கொலை செய்ய முயன்றதாக பேசினார்கள். அப்போது தமிழ்வாணன் எனக்கு கொடுத்த அறிவுரை ஒரு மனிதன் வாழ்க்கையில் எப்படி பேசுகிறான் என்பது முக்கியம் அல்ல. மற்றவர்கள் அவனை பற்றி என்ன பேசுகிறார்கள் என்பது தான் முக்கியம் என்றார். அந்த சொல் தான் எனக்கு ஊக்க மருந்தாக அமைந்தது. இந்த விழாவிற்கு நான் வருவதற்கு 10 நிமிடத்திற்கு முன்னதாக லண்டனில் இருந்து பேசினார்கள். அப்போது இந்த நூலை ஆங்கிலம் உள்பட அனைத்து ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடபோவதாக கூறி எனக்கு வாழ்த்து சொன்னார்கள். சந்தோஷம் என்பது எங்கே இருக்கிறது? என்று தேடி அலையவேண்டியது இல்லை. வாழ்நாள் முழுவதும் அடுத்தவர்களை பற்றி கவலைப்பட்டால் நாம் சந்தோஷமாக வாழலாம்.

### 10 ரூபாய் திட்டம்

வாழ்க்கையில் பொன்னும் பொருளும் சந்தோஷம் அல்ல. இருப்பதை மற்றவர்களுக்கு கொடுத்து உதவுவதும், தினமும் ஒரு உயிருக்கு உதவுவதிலும் தான் சந்தோஷம் இருக்கிறது. நான் சர்வதேச அகதிகள் நிறுவனத்தின் இந்திய பிரிவிற்கு தலைவராக இருக்கிறேன். அகதிகள் என்பவர்கள் நாடு விட்டு நாடு வந்தவர்கள் மட்டும் அல்ல. இயற்கை இடர்பாடுகளால் பெ[illegible]ாரை இழந்தவர்கள் [illegible]னையில் தாய் தந்தையை இழந்து திக்கற்றவர்களாக தவிப்பவர்களும் அகதிகள் தான். அதுபோன்ற குழந்தைகளின் படிப்பிற்கு உதவுவதற்காக 10 ரூபாய் அனுப்பும் ஒரு திட்டத்தை பாலம் நிறுவனம் தொடங்க இருக்கிறது.

இவ்வாறு கலியாண சுந்தரம் பேசினார்.

விழாவில் திருச்சி மாநகராட்சி மேயர் சாருபாலா தொண்டைமான், சிலம்பொலி செல்லப்பன், நூல் ஆசிரியர் வக்கீல் ஜெயராமன், சின்சியா சேவை மைய நிறுவனர் ஜமால் முகமது ஈசா ஆகியோரும் பேசினார்கள். தொடக்கத்தில் கே.சி நீலமேகம் வரவேற்று பேசினார். முடிவில் டி. மணி நன்றி கூறினார். விழா நிகழ்ச்சிகளை . சுப்பிரமணியன் தொகுத்து வழங்கினார். திருச்சியை சேர்ந்த சரஸ்வதி என்பவர் பாலம் தொண்டு நிறுவனத்திற்கு 65 லட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியதாக விழாவில் அறிவிக்கப்பட்டது.